நிந்தவூர் பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

----------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிந்தவூர் பிரதேச சபையின் 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 8,250 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சாரக் கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பவற்றிற்காக மீளாய்வாண்டில் செலுத்தவேண்டிய ரூபா 17,621 கூட்டுமொத்த தொகை நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 140,730 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2005 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள மின்பாவனையாளர்களிடமிருந்து பெறவேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 2,477,322 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 2,951,150 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 10 உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி வறிதான 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டுமொத்த நிலுவை ரூபா.114,003 கடன் மீதியை சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடம் மற்றும் பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு 2014 யூன் 13 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுகளின் படிகாட்டப்பட்ட பின்வரும் விடங்கள் அவற்றுக்கு எதிரேகுறிப்பிடப்பட்ட சான்றுகள் கிடைக்கப் பெறச்செய்யாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 1,390,200 | நிலையான சொத்தக்கள் பதிவேடு மெய்மை ஆய்வு அறிக்கை |
| மேட்டார் வாகனம் | 4,357,640 | |
| பொறித்தொகுதி | 11,620,115 | |
| பதவியினர் கடன்கள் | 2,875,096 | காலப்பகுப்பாய்வு அறிக்கை |
| நூல் நிலைய புத்தகங்கள் | 2,302,980 | நூலகப் புத்தக பதிவேடு மெய்மை ஆய்வு அறிக்கை |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ)1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளுராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 ஜனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் பிரதேச சபைக்கு ஆலோசனை அளிப்பதற்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தும், அதற்கிணங்க குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.<br>- நிதி மற்றும் கொள்கை உருவாக்கல்,<br>- வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி,<br>- தொழில்நுட்ப சேவைகள் அத்துடன்<br>- சுற்றாடல் மற்றும் பொது வசதிகள். |
| (ஆ)1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகளின் அத்தியாயம் X இன் பிரிவு 217 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்.

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,608,656 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,437,836 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 829,180 பின்னடைவைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

1980 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 3,177,096 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2004 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டு 2012 ஆம் ஆண்டு இறுதிவரை வைப்புப் கணக்கில் காட்டப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி ரூபா 394,488 மொத்த தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்காது மீளாய்வாண்டில் சபையின் வருமானக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) பொது நூலக இரவல் பகுதியிலிருந்து 30 அங்கத்தவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 7,018 பெறுமதியான 30 புத்தகங்களை மீள ஒப்படைக்கும் காலப்பகுதி முடிவடைந்தும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது நூலகத்தில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 யூன் 13 வரை உசாத்துணைப்பகுதி தொடர்ச்சியாக பயன்பாடற்று மூடப்பட்டுள்ளது.

(ஈ) பல்வேறுபட்ட சேவைகளின் பொருட்டு வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 492,005 கூட்டு மொத்தத் தொகையை வருமானக் கணக்கிற்கு மாற்றாது வைப்புக்கணக்கில் 03 ஆண்டுகளாக காட்டப்பட்டுவருகின்றது.

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

#### 3.2.1 பேப்பர் மீள் சுழற்சி இயந்திரம் பயன்படுத்தாமை

சபையினால் 2008 ஆம் ஆண்டு ரூபா.731,600 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பேப்பர் மீள் சுழற்சி இயந்திரமானது உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2014 யூன் 13 வரை களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

மீளாய்வாணடில் சபையினால் குறித்தொதுக்கப்பட்ட விசேட மாகாண அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 299,965 பெறுமதியான 35,290 குப்பை சேகரிக்கும் பைகளில் 98% ஆனவை களஞ்சியத்தில் குறித்த தேவைக்கு பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 உள்ளகக் கணக்காய்வு

---

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு எற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு எற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு